**25.09.2024**

**O.S.No. 54/2018**

**PW.1 - திருமதி. மகேஸ்வரி, க/பெ. வெங்கடசாமி**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

பாகம் கோரி நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் என் அப்பா மற்றும் உறவுமுறை குறித்து நிரூபணம் செய்ய ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்திருக்கிறேன். என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சாட்சி மௌனமாக இருந்தார். என் அப்பாவிற்கும், என் அம்மாவிற்கும் கல்யாணம் நடந்தது அது சட்டப்படியான கல்யாணம் என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை. என் அப்பா என நான் சொல்லும் சுப்பிரமணி என் அம்மாவை திருமணம் செய்துகொள்வதற்கு முன்னரே சுப்பிரமணி பிரதிவாதி தேன்மொழியை திருமணம் செய்து கொண்டிருந்தார் என்றால் சரியல்ல, முதலில் என் அம்மாவை தான் திருமணம் செய்து கொண்டார். என் அம்மாவை சுப்பிரமணி எப்போது திருமணம் செய்து கொண்டார், தேன்மொழியோடு எப்போது சேர்ந்து வாழ துவங்கினார் என்பது பற்றி நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. எங்களிடையே உறவுமுறையை உரிய ஆதாரங்களுடன் கேட்காததால் நான் எந்த பரிகாரமும் கேட்க முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை என் அப்பா சுப்பிரமணி யார் யாருக்கு எப்போது விற்றார் என்று சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியும் 2013ம் ஆண்டு வேலனுக்கு விற்றார். (நீதிமன்றத்திற்கு வந்திருக்கும் நபரை சுட்டிகாட்டி) வேலன் இவரா என்ற போது ஆம் என்றார். தாவா சொத்து குறித்து வில்லங்க சான்று வாங்கி பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. வில்லங்க சான்றை போட்டு பார்த்திருந்தால் என் அப்பா யார் யாருக்கு எப்போது சொத்துக்களை விற்றார் என்று தெரிந்திருக்கும் என்றால் சரிதான். சரஸ்வதிக்கு 2007ல் என் அப்பா சுப்பிரமணி சொத்தை விற்றிருக்கிறார். இப்போது நான் வழக்கில் என் அப்பா சரஸ்வதிக்கு விற்ற சொத்தையும், வேலனுக்கு விற்ற சொத்தை மட்டுமே சொல்லியிருக்கிறேன் என்றும் மற்ற சொத்தை பொறுத்து பாக பிரிவினை கோரவில்லை என்றால் சரிதான். இதற்கு முன்னர் என்னை கேட்ட போது சந்தோஷ், சின்னப்பன், நாகராஜ் ஆகியோருக்கு விற்றது தெரியும் என சொல்லியிருக்கிறேன் என்றால் நாகராஜ் சித்தப்பாவிற்கு விற்றது தெரியும். சந்தோஷ், சின்னப்பன் ஆகியோருக்கு விற்றது தெரியாது, அப்படி என்றால் அப்போது சொன்னது தவறா, இப்போது சொல்வது தவறா என்றால் அப்போது சொன்னது தவறு. எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 1994ல் நடந்தது. எனக்கு திருமணம் ஆகி சென்ற பிறகும், அதற்கு

பிறகும், முன்னரும் பிரதிவாதிகளாக தேன்மொழி, மணிமேகலை, சுமதி, புனிதா, தினேஷ் ஆகியோரோடு எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான், அவர்கள் என்னை சேர்த்துக்கொள்ளவில்லை. எனக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும் சம்மந்தம் இல்லை என்பதாலேயே என்னை சேர்த்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது இறப்பு சான்று, வாரிசு சான்று போன்றவை வாங்கி நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அம்மா இருக்கிறார்களா என்றால் இல்லை, எப்போது இறந்தார் என்றால் 1995ல் இறந்தார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 இறப்பு சான்றில் சுப்பிரமணியின் மனைவி தேன்மொழி என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், அவ்வாறு அவர்கள் வாங்கியிருக்கிறார்கள். என் அப்பா 2017ல் இறந்த போது அவருக்கு 64 வயது என வா.சா.ஆ.4ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 என் அம்மா காந்தம்மாளின் இறப்பு சான்றில் 1995ல் என் அம்மா இறந்த போது அவருக்கு வயது 60 என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு சுப்பிரமணி குடும்பத்தோடு உறவு என காண்பிப்பதற்கு ஆதரவு ஆவணங்கள் ஏதும் இல்லாததால் வா.சா.ஆ.5 இறப்பு சான்று பின்னிட்டு பெறப்பட்டுள்ளது என்றும், அதில் என் அம்மா காந்தம்மாளின் கணவர் சுப்பிரமணி என கண்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் சுப்பிரமணிக்கும், தேன்மொழிக்கும் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று கட்சி செய்யவில்லை என்றால் சரிதான். என் அம்மா தான் முதல் மனைவி என வழக்கில் நான் குறிப்பாக சொல்லியிருக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அப்பா என சொல்லும் சுப்பிரமணிக்கு என்னென்ன சொத்துக்கள் இருந்தன, எந்தெந்த சொத்துக்கள் எப்படி வந்தது, அதில் எவற்றை அவர் விற்றிருக்கிறார், அவர் இறக்கும் போது எந்த சொத்துக்கள் இருந்தன என்பது குறித்து சரியான முறையில் விவரமாக சொல்லவில்லை என்றால் தாத்தா வழி சொத்துக்கள் ஆகும். என் வழக்கை ஆட்சேபித்து வேலன் போட்ட பதிலை பார்த்திருக்கிறேனா என்றால் அதுபற்றி தெரியாது. அதில் வேலன் தெளிவாக யார் யாருக்கு சுப்பிரமணி எந்தெந்த சொத்துக்களை எப்போது கிரயம் கொடுத்திருக்கிறார் என சொல்லியிருக்கிறார் என்றும், அவ்வாறு என் அப்பா விற்ற அத்தனை சொத்துக்களையோ, யார் யாருக்கு விற்ற அத்தனை நபர்களையும் சேர்க்கவில்லை என்றும், சரஸ்வதி மற்றும் வேலன் ஆகிய இருவர் வாங்கிய சொத்துக்களை மட்டுமே சேர்த்திருக்கிறேன் என்றால் சரியல்ல. தியாகராஜன் எனக்கு யார் என்றால் அண்ணன் வேண்டும், எப்படி என்றால் பெரியப்பா மகன். நீதிமன்றம் குறிப்பாக கேட்ட போது சுப்பிரமணியின் அண்ணன் மகன் என்ற முறையில் தனக்கு பெரியப்பா மகன் என்றார். நாகராஜ் எனக்கு என்ன வேண்டும் என்றால் சித்தப்பா முறை, அவரது அப்பா பெயர் முனியப்பன்

என்றால் சரிதான். சந்தோஷ், நாகராஜ், சின்னப்பன் மற்றும் வேலன் ஆகியோர் என் அப்பாவிடமிருந்து கிரயம் வாங்கிய சொத்துக்களை பொறுத்து அவர்கள் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் ஆகிவிட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் அவ்வாறு சந்தோஷ், நாகராஜ், சின்னப்பன் மற்றும் வேலன் ஆகியோர் பெயரில் உள்ள பட்டாக்கள் என்றால் அதுபற்றி தெரியாது. வா.சா.ஆ.16 பள்ளி பதிவு தாளில் (Record Sheet) சுப்பிரமணியம் என் தகப்பனார் என சொல்லப்பட்டிருக்கவில்லை, மாறாக பாதுகாவலர் என் இடத்தில் சுப்பிரமணியம் என உள்ளது என்றால் சரியல்ல, என் அப்பா தான் சுப்பிரமணியம். நான் சொன்ன மாதிரி என் அம்மாவை சுப்பிரமணி முதலாவதாக திருமணம் செய்துக்கொண்டிருந்தால் என் அப்பா பெயர் சுப்பிரமணி என சரியாக சொல்லப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 பட்டாவிலும் முனியப்பன் மகன் நாகராஜ் என சொல்லப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். நாகராஜனையோ, தியாகராஜனையோ இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் எனக்கு உறவினர்கள் என்பதால் அவர்களை விட்டுவிட்டேன், வேலனும், சரஸ்வதியும் அன்னியர்கள் என்பதால் அவர்கள் கிரயம் வாங்கியதை மட்டும் ஆட்சேபிக்கிறேன் என்றால் சரியல்ல. தியாகராஜன் எனக்கு என்ன முறையில் உறவு என்றால் பெரியப்பா மகன். சங்கர் என்ன முறை என்றால் எனக்கு மாமா. தியாகராஜன் மற்றும் என் மாமா சங்கர் தூண்டுதலின் பேரிலேயே வேலன் மீதும், சரஸ்வதி மீதும் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன், அவர்களிடமிருந்து அவர்கள் கிரயம் வாங்கிய சொத்தை பறிக்க எண்ணுகிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் எனக்கு தாவா சொத்துக்களில் எந்த உரிமையும் இல்லை என்று நன்கு தெரிந்த போதும், 6 மற்றும் 7 பிரதிவாதிகளுக்கு இடைஞ்சல் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே பொய்யாக சங்கதிகளை சொல்லி வழக்கு போட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் தியாகராஜனுக்கும், சுப்பிரமணிக்கும் இடையே வழக்கு ஏதும் நடந்ததா, பிரச்சனை ஏதும் இருந்ததா என்றால் அதுபற்றி தெரியாது. வேலன் சரியான முறையில் சரியாக விசாரித்து அவர் கிரயம் வாங்கிய சொத்து சுப்பிரமணி உடையது என தெரிந்தே நல்லெண்ணத்துடன் கிரயம் வாங்கியிருக்கிறார் என்றும், அதனால் அவர் கிரயம் வாங்கிய சொத்தை பொறுத்து நான் பரிகாரம் பெற இயலாது என்றால் சரியல்ல, அது என் தாத்தா சொத்து. தாத்தா சொத்தில் தான் நான் பங்கு கேட்டிருக்கிறேன் என்றால் சரிதான். நான் சுப்பிரமணியின் மகள் என நிரூபித்தாலும், அவருடைய தனிப்பட்ட சொத்தில் தான் பாகம் கோர இயலும் என்றும், மாறாக மூதாதையர் வழி சொத்தில் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. 2013ல் வேலன் கிரயம் வாங்கிய போதே தெரியும் என்றால் சரியல்ல. 2018ல் EC போட்டு பார்த்த போது தான் தெரியும். நான் பொய்யாக சொல்கிறேன்

என்றும், ஏனெனில் EC தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வேலன் கிரயம் வாங்கிய சொத்தின் பட்டா அவர் பெயருக்கு மாறுதல் செய்யப்பட்டுவிட்டது, அவர் தான் அந்த சொத்தின் சுவாதீன அனுபவத்தில் இருக்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு வேலன் கிரயம் வாங்கியதும், அந்த சொத்தில் பட்டா அவர் பெயரில் மாறுதலாகியிருப்பதும் வேலன் கிரயம் வாங்கிய சொத்தில் சுவாதீனத்தில் இருப்பதும் நன்றாக தெரியும் என்றும், வழக்கிற்காக தெரியாது என பொய்யாக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. வேலன் கிரயம் வாங்கியது செல்லாது என நான் பரிகாரம் கேட்க முடியாது என்றும், அவர் கிரயம் வாங்கிய சொத்தை பொறுத்து நான் பாகம் கேட்க முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. சுப்பிரமணியிடமிருந்து கிரயம் வாங்கிய எல்லோரையும் வழக்கு தரப்பினர்களாக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றும், நான் கோரியபடி எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

M SUMATHI SAI PRIYA

Digitally signed by M SUMATHI SAI PRIYA

Principal District Judge,
Krishnagiri.